1971 ஜூலை 3]

விவசாயிகள் நீர்ப்பாசன கூட்டுறவு சங்கங்கள்

***124 வினா திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டிலுள்ள தரிசு நிலங்களை, சிறு விவசாயிகள் நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவி, செப்பனிட்டுப் பயிரிட அரசிடம் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம்.

திரு. கே. ஏ. வகாப் : சிறு விவசாயிகள் நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன ? அதற்கு எத்தனை ஏக்கர் நிலங்கள் அதிக பட்சவரம்பாக வைக்கப்பட்டிருக்கிறது ? எவ்வளவு பேர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதிக பட்சமான நிலம் இரண்டு ஹெக்டார் ஒரு ஹெக்டார் என்பது 2½ ஏக்கர். அதற்குக் குறைவாக உள்ளவர்கள் சிறு விவசாயிகள் என்று கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். சிறு விவசாயிகள் கூட்டுறவு நீர்ப்பாசன சங்கங்கள் இன்றியமையாத நன்மையில் இருக்கின்றன. கடன்வசதி, ரிசர்வ் பாங்க், ஏ.ஆர்.சி., உலக வங்கி மூலம் பெற்று வழங்கப்படுகிறது. உலக வங்கியினர் 15 ஏக்கருக்கு ஒரு கிணறுதான் வெட்ட வேண்டுமென்று நிபந்தனை விதித்திருக்கிறார்கள். ஆகவே, சிறு விவசாயிகளை ஒன்று சேர்க்கும் தன்மையில் இதை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : புதிதாகப் பதிவு செய்யப்பட்ட நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு நிதி உதவி செய்யத் திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : புதிதாக ஏற்படுகின்ற சிறு விவசாயிகளுடைய நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன. குறிப்பாக, அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற கடன்களில் ஐந்து சதவிகிதம் அவர்கள் பங்கெடுக்க வேண்டுமென்ற விதியைத் தளர்த்தி 2½ சதவிகிதம் மட்டுமே பங்கெடுத்துக் கொண்டால் போதும் என்று செய்திருக்கிறோம்.

திரு. எ. ஆர். சுப்பையா : லிப்ட் இரிகேஷன் என்ற அடிப்படையில்தான் இது நடக்கிறது. லிப்ட் இரிகேஷன் கூட்டுறவு சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டிருந்தால் நம்முடைய மாநிலத்திலிருந்து எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதிலே ரிசர்வ் வங்கியிலிருந்து அறிவுரை ஒன்று வந்தது. ஒவ்வொரு பிளாக்கிலும் பஞ்சாயத்து யூனியன் பகுதியிலும் ஒரு அமைப்பாளர் என்று

ஏற்படுத்திக்கொள்ளும்படியாக கைடு லைன்ஸ் கொடுத்தார்கள். அதன்படி இப்போதுதான் அமைப்பாளரை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். உலக வங்கியினர் 800 அடிக்கு ஒரு கிணறு தான் வைக்கவேண்டுமென்று நிபந்தனை விதித்திருக்கிறார்கள். அதுதான் சற்றுச் சங்கடமாக இருக்கிறது. அதையும் சமாளிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறோம். உலக வங்கியில் இருந்து 26 கோடி ரூபாயும், ஏ.ஆர்.சி. அதாவது ரிசர்வ் பாங்கு மறுநிதிக் கார்ப்பரேஷனில் இருந்து 31 கோடி ரூபாயும், நிலவள வங்கிமூலம் இந்தத் தடவை 22 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 79 கோடி ரூபாயும் அளவுக்குப் பண வசதி செய்து கொடுக்க முடியும். இதற்கு முன்ஏற்பாடுகள் எல்லாம் செய்த பிறகுதான் தொகையைக் கொடுக்க முடியும்.

திரு. நா. இராசாங்கம்: சிறு விவசாயிகள் கூட்டுறவு நீர்ப்பாசனச் சங்கங்கள் பொதுவாக நிலவி வருகின்றன. அதிலே தண்ணீர் போகின்ற இடம், தண்ணீர் இல்லாத இடம் என்று பார்த்துத் தண்ணீர் இல்லாத நிலங்களுக்கு முதலிடம் கொடுத்து, மழை பெய்தாலொழிய தண்ணீர் வசதி இல்லாத நிலங்களை சர்வே செய்து அதற்கு முதலிடம் கொடுத்து சிறு விவசாயிகள் கூட்டுறவு நீர்ப்பாசனச் சங்கங்களை ஏற்படுத்தி உதவி செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: புன்செய் நிலங்களுக்குத் தான் முதலிடம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: கோவை மாவட்டத்தில் கூட்டுறவு நீர்ப்பாசனச் சங்கங்களை அமைக்க வேண்டுமென்று சொன்னால் அதிகப்படியான தொகை ஒதுக்கினால்தான் முடியும். கிணறு வெட்ட 30,000 ரூபாய் என்று கொடுப்பது போதாது. ஆகவே, அதை அதிகப்படுத்திக் கொடுப்பதோடு அதை மானியமாக வழங்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கிணறு வெட்ட உச்ச வரம்பு 30,000 ரூபாய் அல்ல; 35,000 ரூபாய்வரை அளிக்கப்படுகிறது. அதற்குமேலும் 10,000 ரூபாய்வரை அளிக்கவும் வழி இருக்கிறது. இது கடனாகக் கொடுக்கப்பட்டு நிலைமைக்குத் தகுந்த மாதிரி 10, 12, 15 ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பப் பெற்றுக்கொள்ள வழி செய்யப்பட்டிருக்கிறது. மானியமாகக் கொடுப்பது என்பது கூட்டுறவுத் துறையில் இல்லை.

திரு. கே. ஏ. வகாப்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது 15 ஏக்கருக்கு ஒரு கிணறுதான் வெட்டவேண்டுமென்று உலக வங்கி நிபந்தனை விதித்திருப்பதாகக் கூறினார்கள். அது விவசாயிகளுக்குப் பாதகம் விளைவிப்பதாக இருப்பதால் அதற்கு விதிவிலக்கு வாங்கித் தேவையான இடத்தில் கிணறு வெட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

1971 ஜூலை 3]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : உலக வங்கி பணம் கொடுக்கிறது. ஏ.ஆர்.சி., மறுநிதிக் கழகம் பணம் கொடுக்கிறது. பணம் கொடுக்கின்றவர்கள் நிபந்தனை விதிக்கிறார்கள். கூடிய வரையில் அந்த நிபந்தனைகளுக்கு விதிவிலக்குப் பெற முயன்று வருகிறோம். இதற்காக உலக வங்கியிடம் தூதுக்குழு போனார்கள். நமது நிதி இலாகாச் செயலாளரும், நிலவள வங்கியின் தலைவரும், இன்னொருவரும் சென்று பார்த்துப் பேசி இருக்கிறார்கள். பணம் கொடுக்கும் உலக வங்கியினர் நிச்சயமாக 800 அடிக்கு ஒரு கிணறுதான் வெட்ட வேண்டுமென்று கூறுகிறார்கள். 800 அடி என்றால் 15 ஏக்கர்தான் வரும். 800-ஐ 800-ஆல் பெருக்கினால் 640,000 சதுர அடிகள் வரும். ஒரு ஏக்கருக்கு 44,000 சதுர அடி. ஆகவே, 15 ஏக்கருக்கு ஒரு கிணறு என்ற வகையில்தான் அது அமைகிறது. அந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. சொ. காவேரி மணியம் : லிப்ட் இரிகேஷன் சொசைட்டி ஒரு கிராமத்திற்கு ஒன்றுதான் ஏற்படுத்த வேண்டுமென்று விதி இருக்கிறதா? மதுரை மாவட்டத்தில் லிப்ட் இரிகேஷன் சொசைட்டி எத்தனை பதிவாகி இருக்கிறது? எத்தனை சொசைட்டிகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: ஒரு கிராமத்திற்கு ஒரு சொசைட்டிதான் என்ற கட்டுப்பாடு இல்லை. மற்றத் தகவல்களுக்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

Subramaniyaswamy Temple at Tiuchendur

*125 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Subramaniaswamy temple at Tiruchendur is facing danger from sea erosion; and

(b) if so, the action taken by this Government to save the temple from sea erosion?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) கடல் அரிப்பு காரணமாக திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கு உடனடி ஆபத்து எதுவுமில்லை. கடற்கரை நெடுகப் பெரும் பாறைகளைக் குவித்துக் கடல் அலைகளைத் தடுக்க கோயில் அதிகாரிகள் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளையெல்லாம் எடுத்து வருவதே அதற்குக் காரணமாகும். ஆனால், அங்கு காப்புச் சுவர் ஒன்று கட்டுவது மிக இன்றியமையாததென அறியப்படுகிறது.

(இ) கோயிலுக்குக் கிழக்குப் பக்கத்தில் ரூ. 11.80 லட்சம் செலவில் காப்புக்கரை ஒன்றைக் கட்டுவதற்கான மதிப்பீடு ஒன்றைத் தூத்துக்குடி துறைமுகத்திட்ட தலைமைப் பொறியாளர் தயாரித்துள்ளார். இது தொடர்பான செலவை ஏற்பதற்குரிய நிதிவாயில்களை எவ்வாறு பெறுவது என்பது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.